NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* Front Page
**Date:** 19 August 2019

# கல்வி, பருவநிலை மாற்றத்தில் மிகுந்த அக்கறை

*ஊழியர்கள் ஓய்வுபெறும் வயது 65ஆகவும் மறுவேலைவாய்ப்பு வயது 70ஆகவும் உயர்த்தப்படும்*

இருநூற்றாண்டு நிறைவை சிங்கப்பூர் கொண்டாடி வரும் வேளையில் எதிர்காலத்திலும் வெற்றிகரமான நாடாகத் திகழ மூன்று முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்தப்படும் என பிரதமர் லீ சியன் லூங் தெரிவித்துள்ளார்.

பின்னணி எதுவாக இருப்பினும் ஒவ்வொரு இளையரும் வாழ்க்கையில் வெற்றிபெற வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது, ஒவ்வொருவரும் நீண்டகாலம் பணிபுரிய வழிவகுப்பது, பருவநிலை மாற்றத்தில் இருந்து சிங்கப்பூரைக் காத்து, அடுத்த நூற்றாண்டுக்கு ஏற்ற வகையில் நாட்டைப் புதுப்பிப்பது ஆகியவையே அம்மூன்று அம்சங்கள்.

அங் மோ கியோவில் உள்ள மத்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் நேற்றிரவு தேசிய தினப் பேரணி உரையை ஆற்றியபோது திரு லீ இவற்றைக் குறிப்பிட்டார்.

இவ்வாண்டு ஜனவரியில் இருந்து சிங்கப்பூரின் இருநூற்றாண்டு நிறைவு கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வேளையில் இந்தியர், யூரேசியர் எனப் பல்வேறு சமூகங்களும் தொழில் நிறுவனங்களும் பள்ளிகளும் தங்களுக்கே உரிய வழிகளில் அதனைக் கொண்டாடி வருவதாக அவர் சொன்னார்.

சிங்கப்பூரில் இந்தியப் பாரம்பரிய நடனம் தொடங்கி நூறாண்டுகள் ஆனதை நினைவுகூரும் விதமாக கடந்த ஏப்ரலில் ஐந்து இந்திய நடனக் குழுக்கள் இணைந்து எஸ்பிளனேடில் 'நாட்டிய யாத்ரா' எனும் நிகழ்ச்சியைப் படைத்ததை அவர் குறிப்பிட்டார்.

சிங்கப்பூரின் செழுமையான வரலாற்றை எடுத்துரைக்கும் விதமாக ஃபோர்ட் கேனிங்கில் இடம்பெற்று வரும் கண்காட்சியைப் பல நூறாயிரம் பேர் கண்டுகளித்துள்ள நிலையில், பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அது இவ்வாண்டு இறுதி வரை நீட்டிக்கப்படும் என பிரதமர் அறிவித்தார்.

அமெரிக்கா, சீனா இடையிலான வர்த்தகப் பூசல் உலகப் பொருளியலில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்ட திரு லீ, சிங்கப்பூர் எப்பக்கமும் சாராமல் நடுநிலைமையைப் பேணும் என்று சொன்னார்.

இவ்வாண்டு நாட்டின் பொருளியல் வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவு மெதுவடைந்துள்ளதாகக் கூறிய அவர், அனைத்துலகத் தேவையும் வர்த்தகமும் சரிந்ததும் அதனால் நமது உற்பத்தி, வர்த்தகம் சார்ந்த துறைகள் பாதிக்கப்பட்டதுமே அதற்கு முக்கிய காரணம் என்றும் சுட்டினார்.

> “ இப்போதைய பொருளியல் சூழலில் உடனடி ஊக்குவிப்பு நடவடிக்கைகள் தேவையில்லை. எனினும் நிலைமை மோசமடைந்தால் ஊழியர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
>
> **பிரதமர் லீ சியன் லூங்**



அதே நேரத்தில், மற்ற துறைகளில் பாதிப்புக் குறைவுதான் என்றும் ஆள் குறைப்பு, வேலையின்மை விகிதங்கள் குறைவான அளவிலேயே தொடர்வதாகவும் அவர் தெரிவித்தார்.

சிங்கப்பூர்க் குழந்தைகளுக்கு முடிந்த அளவிற்குச் சிறப்பான வாழ்க்கைத் தொடக்கத்தை அளிக்க முயன்று வருவதாக பிரதமர் லீ கூறினார்.

அதற்கேதுவாக, கல்வியில் அதிக முதலீடு செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மூன்றும் அதற்கு மேற்பட்ட வயதுக் குழந்தைகள் அனைவருக்கும் பாலர் பள்ளிகளில் இடம் கிடைக்கும் வகையில் அப்பள்ளிகளில் இடங்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. பாலர் பள்ளிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. கல்வி அமைச்சு பாலர் பள்ளிகளைத் தொடங்கியுள்ளது. தற்போது 24ஆக இருக்கும் அப்பள்ளிகளின் எண்ணிக்கை இன்னும் சில ஆண்டுகளில் இரு மடங்கிற்கும் மேலாக உயர்த்தப்படும் என்றார் பிரதமர்.

பாலர் கல்விக் கட்டணங்கள் கட்டுப்படியாக இருப்பதற்காக முதன்மை நிறுவனங்களுக்கும் பங்காளி நிறுவனங்களுக்கும் அரசாங்கம் நிதியுதவி அளித்து வருகிறது.

இந்நிலையில், குழந்தைகளின் ஆரம்பக் கல்வி தொடர்பில் நடுத்தர வருமானக் குடும்பங்களின் சுமையைக் குறைக்கும் வகையில், பாலர் கல்வி மானியத்திற்குத் தகுதி பெறுவதற்கான வருமான வரம்பு $7,500லிருந்து $12,000ஆக உயர்த்தப்படும் எனத் திரு லீ தெரிவித்தார்.

ஆரம்பக் கல்விக்காக இப்போது ஆண்டுக்கு ஒரு பில்லியன் வெள்ளியை அரசாங்கம் செலவிட்டு வருகிறது என்றும் இன்னும் சில ஆண்டுகளில் அத்தொகை $2 பில்லியனுக்கு மேல் உயரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உயர்கல்வியிலும் அரசாங்கம் அதிக முதலீடு செய்யவிருப்பதாகப் பிரதமர் கூறினார்.

அண்மையில் உயர்கல்விக்கான கட்டணங்கள், கல்வி உதவி நிதி ஆகியவற்றைக் கல்வி அமைச்சு மறுஆய்வு செய்ததாக அவர் சொன்னார்.

அதைத் தொடர்ந்து, சிங்கப்பூர் தொழில்நுட்பக் கழகம் (எஸ்ஐடி), சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக் கழகம் (எஸ்யுஎஸ்எஸ்) ஆகிய கல்வி நிலையங்களில் முழு நேர பொதுவான பட்டப் படிப்புகளுக்கான வருடாந்திர கல்விக் கட்டணத்தை $8,000லிருந்து $7,500ஆக அமைச்சு குறைக்கவுள்ளது.

அதுபோல, பல்கலைக்கழக, பலதுறைத் தொழிற்கல்லூரி, மருத்துவ மாணவர்களுக்கான கல்வி உதவி நிதியும் அடுத்த ஆண்டில் இருந்து குறிப்பிடத்தக்க அளவு உயர்த்தப்படும் என திரு லீ அறிவித்தார்.

அதுதவிர, அத்தகைய உயர்கல்வி நிலையங்களே பிரத்தியேக கல்வி உதவி நிதித் திட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்றும் அதற்கெனப் பெறப்படும் நன்கொடைகளுக்கு ஈடாக அரசாங்கமும் 1.5 முதல் மூன்று மடங்கு தொகையை வழங்கும் என்றும் அவர் உறுதிகூறினார்.

சிங்கப்பூரின் சராசரி ஆயுட்காலம் 84.8 ஆண்டுகளாக உயர்ந்துள்ள நிலையில் அதிக காலம் பணிபுரிய பலரும் ஆர்வமாக இருக்கின்றனர்.

இதன்பொருட்டு, இப்போது 62ஆக உள்ள ஓய்வுபெறும் வயது 65ஆக உயர்த்தப்படும் என்றார் அவர்.

2022ல் ஓய்வு வயது 63ஆகவும் 2030க்குள் 65ஆகவும் உயர்த்தப்படும். அதுபோல மறுவேலைவாய்ப்பு வயதும் 67லிருந்து 70ஆக அதிகரிக்கப்படும்.

அதற்கேதுவாக, முதிய ஊழியர்களின் மசே நிதி பங்களிப்பு விகிதமும் உயர்த்தப்படும்.

அதே நேரத்தில், 55 வயதை எட்டியதும் மசே நிதி கணக்கில் இருந்து குறிப்பிட்ட தொகைக்கு மேல் உள்ள பணத்தை எடுக்கலாம் என்ற நடைமுறை தொடரும் என்ற அவர், அது தொடர்பாக சமூக ஊடகங்களில் வெளியாகும் பொய்த் தகவல்களை நம்ப வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

இன்றைய காலகட்டத்தில், மனித குலம் எதிர்கொண்டுள்ள ஆகப் பெரிய சவால்களில் பருவநிலை மாற்றமும் ஒன்று என்ற அவர், சிங்கப்பூர் ஆயுதப் படைகளை எப்படி முக்கியமாக கருதுகிறோமோ அதுபோலவே பருவநிலை மாற்றத்தில் இருந்து நம்மைத் தற்காத்துக்கொள்வதையும் கருத வேண்டும் என வலியுறுத்தினார்.

பருவநிலை மாற்றத்தைப் புரிந்து கொண்டு, அதைக் குறைக்கும் நடவடிக்கைகளை எடுத்து, அதற்குத் தகுந்த வகையில் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் உறுதி அளித்தார்.

சிங்கப்பூரின் கடலோரப் பகுதிகளைப் பாதுகாக்கும் நோக்கில் 'பரந்த தென் நீர்முகப்பு' போன்ற நீண்டகாலத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றார் திரு லீ.

தென்கடலோரத்தில் அமைந்துள்ள தஞ்சோங் பகார், கெப்பல், பிரானி, பாசிர் பாஞ்சாங் ஆகிய துறைமுக முனையங்களை உள்ளடக்கிய 2,000 ஹெக்டர் நிலப்பகுதியில் இந்த 'பரந்த தென் நீர்முகப்பு' அமையவுள்ளது. படிப்படியாக இம்முனையங்கள் இடமாற்றப்பட்டு, குடியிருப்பு, பணியிட, கேளிக்கைப் பகுதியாக உருமாற்றம் பெறும் என பிரதமர் லீ தெரிவித்தார்.

விரிவான செய்திகள்
- பக்கம் 2 & 3

## பிரதமரின் தேசிய தினப் பேரணி உரை 2019 - முக்கிய அம்சங்கள்

### பாலர் கல்வி

- ♦ இப்போது 24ஆக இருக்கும் கல்வி அமைச்சின் பாலர் பள்ளிகள் எண்ணிக்கை அடுத்த சில ஆண்டுகளில் இரு மடங்கிற்கு மேலாகும்.
- ♦ பாலர் பள்ளி மானியத்திற்குத் தகுதி பெற குடும்ப மாத வருமான உச்ச வரம்பு $7,500லிருந்து $12,000ஆக உயர்த்தப்படும்.
- ♦ எல்லாப் பிரிவுகளிலும் பாலர் பள்ளி மானியங்கள் உயர்த்தப்படும்.
- ♦ பாலர் பள்ளிகளில் அரசாங்க உதவியுடன் கூடிய இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.
- ♦ குறைந்த வருமானக் குடும்பங்களைச் சேர்ந்த மேலும் 5,000 குழந்தைகள் பயன்பெறும் வகையில் 'கிட்ஸ்டார்ட்' திட்டம் விரிவுபடுத்தப்படும்.

### உயர்கல்வி

- ♦ சிங்கப்பூர் தொழில்நுட்பக் கழகம் (எஸ்ஐடி), சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம் (எஸ்யுஎஸ்எஸ்) ஆகிய கல்வி நிலையங்களில் முழு நேர பொதுவான பட்டப் படிப்புகளுக்கான வருடாந்திர கல்விக் கட்டணம் $8,000லிருந்து $7,500ஆக குறைக்கப்படும்.
- ♦ பல்கலைக்கழக, பலதுறைத் தொழிற்கல்லூரி, மருத்துவ மாணவர்களுக்கான கல்வி உதவி நிதி உயர்த்தப்படும்.

### முதிய ஊழியர்கள்

- ♦ ஊழியர்களின் திறன் மேம்பாட்டில் ஊழியர்களுக்கும் நிறுவனங்களுக்கும் அரசாங்கம் கைகொடுக்கும்.
- ♦ ஊழியர்களின் ஓய்வு வயது 62லிருந்து 65ஆக உயர்த்தப்படும்.
- ♦ ஊழியர்களின் மறுவேலைவாய்ப்பு வயது 67லிருந்து 70ஆக உயர்த்தப்படும்.
- ♦ 55 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்களுக்கான மசே நிதி பங்களிப்பு விகிதம் அதிகரிக்கப்படும்.

### பருவநிலை மாற்றம்

- ♦ மரினா அணைக்கட்டில் இரண்டாவது நீரேற்று நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ♦ புலாவ் தெக்கோங்கில் கடலிலிருந்து மீட்கப்பட்ட நிலம் சிங்கப்பூர் ஆயுதப் படைகளின் பயிற்சிக்காகப் பயன்படுத்தப்படும்.

### பரந்த தென் நீர்முகப்பு

- ♦ கிழக்கில் கரையோரப் பூந்தோட்டங்களில் இருந்து பாசிர் பாஞ்சாங் வரை சிங்கப்பூரின் தென்கடலோரப் பகுதியில் 30 கிலோமீட்டர் நீளத்திற்குப் பரந்த தென் நீர்முகப்பு அமைக்கப்படும்.
- ♦ பாசிர் பாஞ்சாங்கில் உள்ள இரு பழைய மின்னாற்றல் நிலையங்கள், கேளிக்கை நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு மறுமேம்பாடு செய்யப்படும்.
- ♦ ஊழியர்களுக்காக டௌன்டவுன் சவுத்தில் உல்லாசத்தளம் ஒன்றைக் கட்ட என்டியுசிக்கு நிலம் ஒதுக்கப்படும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.

# உயர்கல்விக் கட்டணம் குறைகிறது; மாணவர்களுக்கு அரசாங்க உதவித் தொகை கணிசமாகக் கூடுகிறது

சிங்கப்பூர் தொழில்நுட்பக் கழகம்(SIT), சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக் கழகம் (SUSS) இரண்டும் தங்களுடைய வருடாந்திர கல்விக் கட்டணத்தைக் குறைக்கும். பிரதமர் லீ சியன் லூங் தேசிய தினப் பேரணி உரையில் இதனை அறிவித்தார். முழுநேர பொது பட்டதாரி மாணவர்களுக்கு அடுத்த ஆண்டு கட்டணம் $8,000 லிருந்து $7,500 ஆகக் குறையும்.

அதேவேளையில், பல்கலைக்கழகம், பலதுறைத் தொழிற்கல்லூரி, தொழில்நுட்பக் கல்விக் கழகம், நன்யாங் நுண்கலைக் கழகம், லாசா கலைக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கு அரசாங்க கல்வி உதவித்தொகை கணிசமான அளவுக்கு அதிகரிக்கப்படும்.

வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்க தேவையான நிதி வளத்தைப் பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் படிப்பைத் தொடரலாம் என்று திரு லீ குறிப்பிட்டார். அவர்கள் படிப்பதற்குப் பணம் ஒரு பிரச்சினையாக இருக்கக் கூடாது என்று தெரிவித்த திரு லீ, தேவையான நிதி உதவிகளை வழங்குவதன் மூலம் இத்தகைய மாணவர்கள் தங்கள் கல்வியைத் திறம்பட கற்க முடியும் என்று கூறினார். ஒளிவுமறைவு இல்லாத, தகுதிக்கு முன்னுரிமை என்ற நிலையில் சிங்கப்பூரை நிலைநாட்டி வருவதற்கு இது அடிப்படை என்று திரு லீ தெரிவித்தார்.

ஆறு பல்கலைக்கழகங்களிலும் படிக்கின்ற மாணவர்களில் பண உதவி தேவைப்படுவோருக்கு அரசாங்க கல்வி உதவித்தொகை அதிகரிக்கப்படும்.

பொது பட்டப் படிப்பு பயில்வோருக்கு உரிய கட்டணத்தில் 75% வரை அந்தப் கல்வி உதவித்தொகை ஈடுசெய்யும்.

இப்போது இந்த அளவு 50% ஆக இருக்கிறது என்று திரு லீ குறிப்பிட்டார். அதிக கல்வி உதவித்தொகை கிடைப்பதால் எடுத்துக்காட்டாக கணினி அறிவியல் அல்லது பொருளியல் படிக்கும் மாணவருக்கு ஆண்டுக்கு $4,000க்குப் பதிலாக $2,000தான் செலவாகும். முழுக் கட்டணம் ஆண்டுக்குச் சுமார் $8,000 என்பது குறிப்பிடத்தக்கது.

பலதுறை தொழிற்கல்லூரி மாணவர்களுக்குக் கட்டணத்தில் 95% வரை உதவித்தொகை கிடைக்கும். உதவித்தொகையைப் பெறும் மாணவர்கள் ஆண்டுக்கு $150 மட்டும் செலுத்தினால் போதும். இப்போது அவர்கள் $600 செலுத்துகிறார்கள். முழு கட்டணம் $3,000 என்பது குறிப்பிடத்தக்கது.

தொழில்நுட்பக் கல்விக் கழகம், நன்யாங் நுண்கலைக் கழகம், லாசா கலைக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த டிப்ளோமோ மற்றும் பட்டப் படிப்பு மாணவர்களுக்கும் அதிக கல்வி உதவித்தொகை கிடைக்கும்.

பலதுறைத் தொழிற்கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் 10 பேரில் ஆறு பேர் அரசாங்க கல்வி உதவித்தொகையைப் பெற தகுதி பெறுவார்கள். ஆகையால் நடுத்தர வருவாய்க் குடும்பங்களைச் சேர்ந்த பல மாணவர்களுக்கும் இதன்மூலம் நன்மை கிடைக்குமென்றார் திரு லீ.

இதனிடையே, நேற்றைய பேரணியில் கலந்துகொண்ட சிங்கப்பூர் தொழில்நுட்பக் கழகத்தின் தலைவர் டான் தியாம் சூன், சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகத் தலைவர் சியோங் ஹீ கியாட் இருவரும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை உயர்த்தப்பட்டதை வரவேற்றார்கள்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.